

நீலகிரி மாவட்டத்தில் கழக முன்னோடியும், பொதுக்குழு உறுப்பினர் மற்றும் குன்னூர் நகராட்சித் தலைவராக பணியாற்றிய ஷீலா கேத்தரின் சமீபத்தில் இயற்கை எய்தினார். இதையடுத்து அவரது திருவுருவப் படத்திற்கு தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா சுற்றுலாத்துறை அமைச்சர் க.இராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர் முபாரக் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர். குன்னூர் நகர் செயலாளர் ராமசாமி, நகராட்சித் தலைவர் (பொறுப்பு) வாசிம்ராஜா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி பள்ளத்திவிடுதி சிவானந்தம் புதல்வி சிவரஞ்சனி டி.என்.பி.எஸ்.சி. நடத்திய குரூப் 2 தேர்வில் மாநில அளவில் முதலிடம் பிடித்து தேர்ச்சி பெற்றதைத் தொடர்ந்து மாணவியின் இல்லத்திற்குச் சென்று சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பாராட்டு தெரிவித்தார்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் "இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்"

# பிப்ரவரி 28-ஆம் தேதி வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை வழங்கி திண்ணைப் பிரச்சாரம்!

## வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் முடிவு - மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், பிப்.27-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் "இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்" ஒலிக்க 6 சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய 2378 வாக்குச்சாவடிகளிலும், வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் அனைவரும் இணைந்து நாளை மறுநாள் பிப்ரவரி 28-ஆம் தேதி ஒருநாள் முழுவதும் வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை வழங்கி "திண்ணைப் பிரச்சாரம்" செய்வது என பம்மலில் நடைபெற்ற வாக்குச்சாவடி தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.'

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. கழக வாக்குச்சாவடி தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் தாம்பரம் மாநகராட்சி, பம்மலில் உள்ள எல்.சி. திருமண மண்டபத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன், ஆலந்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் இரா.நரேந்திரன், திருப்பெரும்புதூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் உமாகாந்த், பல்லாவரம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் க.அன்புச்செல்வன், தாம்பரம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் வழக்கறிஞர் மருதுகணேஷ், செங்கல்பட்டு தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கே.எஸ்.எம்.நாதன், திருப்போரூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பருதி இளம்சுருதி கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, ஜி.சி.அன்புச்செழியன், ஆதிமாறன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன்,

பகுதி செயலாளர்கள் பி.குணாளன், என்.சந்திரன், த.ஜெயக்குமார், வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன், பெருங்களத்தூர் சேகர், டி.காமராஜ், எஸ்.இந்திரன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், வி.எஸ்.ஆராமுதன், ஏ.வந்தே மாதரம், மூவரசம்பட்டு ரவி, நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், க.தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ், ஆர்.எஸ்.சங்கர், ம.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, அருள்தேவி,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், வீ.விஜயகுமார், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், ஜா.செந்தில்தேவராஜ், த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ் கவி, ஜான் தினகரன், உதயா கருணாகரன், கே.ஆர்.ஆனந்தன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் விஜயலட்சுமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

இந்திய திருநாடே திரும்பி பார்க்கும் வகையில் தமிழ்நாட்டு மக்கள் மனம் மகிழ்ந்து பாராட்டும் வகையில் நல்லாட்சி நடத்தி வரும் நம்முடைய ஒப்பாரும் மிக்காருமிலா அன்பு தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியின் 3 ஆண்டு சாதனைகளையும், தமிழ்நாடு அரசின் 2024-25-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் சிறப்பு அம்சங்களையும், தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்கு வீடு தோறும் கொண்டு சேர்க்கவும், அதே சமயம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கும் தமிழுக்கும் தமிழர்களுக்கும் செய்து வரும் அநீதிகளை, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மக்களுக்கும் எடுத்துரைக்கும் வகையில், பிப்ரவரி 26-ஆம் தேதியன்று "இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் கழகத்தினர் ஒவ்வொரு வீடாகச் சென்று துண்டறிக்கைகளை வழங்கி, திண்ணைப் பிரச்சாரம் செய்வது என்று நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, நேற்று (26-ஆம் தேதி) முதல் ஒவ்வொரு நாளும் மாலை நேரங்களில், ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் அமைக்கப்பட்டுள்ள பூத் கமிட்டி உறுப்பினர்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று துண்டறிக்கைகளை வழங்கி, ஒவ்வொரு வீட்டில் உள்ளவர்களிடமும் •இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்• என்ற பரப்புரையை, தேர்தல் பரப்புரையாக திண்ணை பிரச்சாரம் மேற்கொள்வது என்றும்,

வரும் நாடாளுமன்றத் தேர்தலில், பா.ஜ.க. மற்றும் அதனோடு மறைமுக கூட்டணியில் இருக்கும் அதிமுகவை முழுமையாக வீழ்த்தி, கழகத்தினர் அனைவரும் ஒற்றுமையாக தேர்தல் கள பணியாற்றி, நம்முடைய நெஞ்சம் நிறைந்த தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் குரல் டெல்லியிலும் ஒலிக்க வேண்டும் என்று இக்கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்கப்படுகிறது.

நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய உயிரனைய தலைவர் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டிற்காகவும் தமிழ்நாட்டு மக்களுக்காகவும், கடந்த 3 ஆண்டுகளில் செய்திட்ட அரிய சாதனைகளை,

வீடுகள் தோறும் ஸ்டாலினின் குரல் ஒலிக்கட்டும் என்ற தலைப்பில் ஆட்சியின் சாதனைகளை துண்டுப் பிரசுரங்களாக அச்சடித்து ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் அமைக்கப்பட்டுள்ள பூத் கமிட்டி உறுப்பினர்கள், அவரவர் வாக்குச்சாவடிகளில் அமைந்துள்ள இல்லங்களுக்கு நேரில் சென்று அவர்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி நம்முடைய ஆட்சியின் சாதனைகளை, அதனால் ஒவ்வொரு மக்களுக்கும் கிடைத்திட்ட நன்மைகளை விளக்கமாக எடுத்துச் சொல்லி திண்ணை பிரச்சாரங்களை மேற்கொள்வது என்றும்,

"இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்" திண்ணை பிரச்சாரம் மேற்கொள்ளும் போது அந்த இல்லங்களிலுள்ள குடும்பத் தலைவிகளிடம், மகளிரி உரிமை தொகை திட்டம், கல்லூரி மாணவியர்களுக்கு மாதம் தோறும் ரூ.ஆயிரம் வழங்கிடும் புதுமைப் பெண் திட்டம், அரசு பேருந்துகளில் மகளிர் இலவச பயணம், சிறார்களுக்கான காலை சிற்றுண்டி திட்டம், இந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்த கல்லூரி மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.ஆயிரம் வழங்கும் அற்புத திட்டம் என்ற திராவிட மாடல் ஆட்சியின் அடுக்கடுக்கான சாதனைகளையும் எடுத்துக்கூறிட வேண்டுமென்றும் என்று இக்கூட்டத்தில் ஒருமனதாக முடிவெடுக்கப்படுகிறது.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய நியாயமான நிதியை கூட தராமல் இழுத்தடித்து வஞ்சிக்கும் சூழலில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு மாதம் ரூ.ஆயிரம் வழங்கும் "தமிழ் புதல்வன் திட்டம்",

குடிசையில்லா தமிழ்நாட்டை உருவாக்க 8 லட்சம் வீடுகள் கட்டி தரும் "கலைஞரின் கன இல்ல திட்டம்" வறுமை இல்லாத் தமிழ்நாட்டை உருவாக்குவதற்காக 5 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" என


பல்வேறு தரப்பினரும் நன்மை பெற வேண்டும் என்பது குறித்துச் சிந்தித்து, தமிழ்ச் சமூகத்தின் ஒவ்வொருவருக்கும் பயன்படும் வகையில் நல்ல பல திட்டங்களை நாட்டு மக்களுக்கு அறிவித்து, திராவிட மாடல் ஆட்சியை உலகமே பாராட்டுகின்ற வகையில் தந்திட்ட 202425ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்களையும், 3 ஆண்டு சாதனைகளையும் நாட்டு மக்களுக்கு விளக்கிடுகின்ற வகையில் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் பெருமைமிகு தலைவர் அவர்களின் 71வது பிறந்த நாள் விழாவை நாம் அனைவரும் சிறப்பான வகையில் கொண்டாடும் விதமாக,

ஏற்கனவே, நம்முடைய மாவட்ட கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள தலைவர் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்களை, திராவிடல் மாடல் அரசின் சாதனை மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டங்களாக நடத்திடுவது என்றும் இக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

சென்னை கடற்கரையில் உள்ள அண்ணா நினைவிடம் அருகே மிக பிரம்மாண்டமான வகையில் கலைநயத்துடன் அமைக்கப்பட்டுள்ள நம் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் நாம் என்றும் போற்றி வணங்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத் திறப்புவிழா இன்று 26-ஆம் தேதி மாலை நம்முடைய அன்புத் தலைவர் முதல்வர் அவர்கள் தலைவர் தளபதி அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட உள்ளது.

இத்திறப்பு விழாவிற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட, மாநகர ஒன்றிய பகுதி நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்பது என இக்கூட்டம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.





சேலம் கிழக்கு மாவட்டம் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி சார்பில் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி தலைமை தாங்கினார். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் சின்னதுரை, தொகுதி மேற்பார்வையாளர் ராதாகிருஷ்ணன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன், ஒன்றியச் செயலாளர்கள் மணி, பாலமுருகன், அழகுவேல், சித்தார்த்தன், பேரூர் செயலாளர்கள் பாலமுருகன், சரவணன், வேலு, முருகேசன், சண்முகம், பொதுக்குழு உறுப்பினர் சேக் மைதீன் மற்றும் ஒன்றிய பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டம் ஆலந்தூர் ஒன்றியத்தில்

# ரூ.2.62 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், பிப்.27-

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

பெரம்பலூர் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் அரசின் திட்டங்கள் அனைத்து பகுதிகளிலும் முறையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பொது மக்கள் வைக்கின்ற கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட வேண்டும் பொது மக்களின் கோரிக்கைகள் நேரடியாக அரசு அலுவலர்களை சென்று சேர வேண்டும் என்ற உன்னத நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றும் வகையில் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல பகுதிகளில் பல்வேறு திட்டங்கள் மூலம் மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ஜெமீன் ஆத்தூர் ஊராட்சியில் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் சிறு பாலம் கட்டும் பணி, புஜங்கராயநல்லூரில் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணி, கூத்தூர் ஊராட்சி ஆதிதிராவிடர் தெருவில் ரூ.3.00 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, இலந்தங்குழி ஊராட்சி சீரா நத்தம் தனவேல் வீடு அருகில் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் வாய்க்கால் அமைக்கும் பணி, அல்லிநகரம் ஊராட்சியில் ரூ.11.00 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணி, மேலமாத்தூர் ஊராட்சி பி.சி. தெருவில் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணி, ஆதனூர் ஊராட்சி மதுராகுடிக்காடு கிராமத்தில் ரூ.7.40 லட்சம் மதிப்பீட்டில் பால் பண்ணை முதல் அங்கன்வாடி வரை தார்சாலை அமைக்கும் பணி, கொளக்காநத்தம் ஊராட்சி வன்னிமரம் அருகில் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் வாய்க்கால் அமைக்கும் பணி என சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.51.40 லட்சம் மதிப்பீட்டில் 8 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மேலும் பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா (2022-23) நிதியின் கீழ் ரூ.30.33 லட்சம் மதிப்பீட்டில் ஜெமீன்ஆத்தூர்அரியலூர் சாலை தார்சாலை அமைக்கும் பணி, கொளக்காநத்தம் ஊராட்சி எஸ்.சி. தெருவில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதிய காலனியில் ரூ.18.00 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணி என பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் 6 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த பணிகள் அனைத்தும் மிக விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகளை துரிதமாக மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் கீழமாத்தூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.25.37 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலகம், சாத்தனூர் ஊராட்சியில் ரூ.39.95 லட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் கட்டிய கிராம செயலகம் மற்றும் கொளக்காநத்தம் ஊராட்சி நபார்டு திட்டம் மூலம் ரூ.38 லட்சம் மதிப்பீட்டில் துணை வேளாண்மை விரிவாக்க மையம் கட்டிடம் உள்ளிட்டவைகள் என மொத்தம் ரூ. 1.03 கோடி மதிப்பீட்டில் 3 பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்துள்ளோம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், பொதுமக்கள் நலன் கருதியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களை பொது மக்கள் முறையாக, முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ரமேஷ், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி, ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சேகர், ஆலத்தூர் வட்டாட்சியர் சத்தியமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வ.சுப்ரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் குறித்து

# பிப்.28-ல் தி.மு.க. மகளிர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா அழைப்பு!

புதுச்சேரி, பிப். 27-

நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, புதுச்சேரியில் 28-ஆம் தேதி நடைபெறும் மாநில தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தி.மு.க.-வைச் சேர்ந்த மகளிர்களுக்கு அமைப்பாளர் இரா. சிவா அழைப்பு விடுத்துள்ளார்.



இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, புதுச்சேரி நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சி சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளரின் வெற்றிக்கு எப்படியெல்லாம் தேர்தல் களமாடுவது குறித்து புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் ஒவ்வொரு அணியாக கூட்டம் நடத்தப்பட்டு தலைமைக் கழக நிர்வாகிகள் மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக புதுச்சேரி மாநில தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி மாநில நிர்வாகிகள் மற்றும் தொகுதி நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் புதுச்சேரி சித்தன்குடியில் உள்ள ஜெயராம் திருமண நிலையத்தில் நாளை (28-ஆம் தேதி - புதன்கிழமை) காலை 08.00 மணிக்கு நடைபெறுகிறது.

எனது தலைமையில் மாநில மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் நடைபெறும் இக்கூட்டத்தில் தலைமைக் கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன்டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப. ராணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்க உள்ளனர்.

ஆகவே, புதுச்சேரி நாடாளுமன்றத் தேர்தலை மையமாக வைத்து நடைபெறும் இக்கூட்டத்தில், புதுச்சேரி மாநில தி.மு.க. மகளிர் அணி மற்றும் தொண்டர் அணி நிர்வாகிகள், தொண்டர்கள், தொகுதி கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளில் பங்கேற்றிருக்கும் மகளிர்கள் என தி.மு.க.-வில் அங்கம் வகிக்கும் அனைத்து நிலையில் உள்ள மகளிர் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே.பி.பி.சாமி

**பிப்ரவரி 27 (2020)**



**பாரம்பரிய தி.மு.க. குடும்பத்தில் பிறந்து, தனது மீனவப் பகுதியில் கழகம் வளர பாடுபட்டதோடு, மீனவ சமுதாயம் முன்னேற பாடுபட்டவர்.**

**திருவொற்றியூர் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர், நகர துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர், மாநில மீனவர் அணிச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து பணியாற்றியவர்.**

**2006, 2011 ஆகிய இரு முறை திருவொற்றியூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றதோடு, 2006ல் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் மீன்வளத் துறை அமைச்சராக பணியாற்றினார்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**